# சூன் - 3 சமூக நீதி உயர்ந்த நாள்!



சூன் 3
சமூக நீதி பிறந்தநாள்,
தலைவர்கலைஞர்உதித்தநாள்,

உலக அரசியலின் அதிசயம்,
இந்திய அரசியலின் ஆச்சரியம்,
தமிழக அரசியலின் விடியல்,
மக்களின் வாழ்வியலை
அறிந்த
ஆராய்ச்சியாளர்,
சமூகம்,
பொருளாதாரம்,
நிர்வாகம்,
மருத்துவம்,
ஆகியவற்றை
அரசியலில்
சமச்சீராக புகுத்தி,
மக்களின் வாழ்வியலில்
வெற்றிக்கண்ட
தலைச்சிறந்த
மனிதர்,
தலைவர் கலைஞர்,

உலக அரசியலில்,
இந்திய அரசியலில்,
தமிழக அரசியலில்,
ஆளுமையும், நிர்வாகமும்,
இலக்கிய அறிவும்,
சமூக சிந்தனையில்
அக்கறையும்
நிறைந்த,
அறிந்த,
ஒரே தலைவர்,
ஒரே முதல்வர்,
முத்தமிழ் அறிஞர்
தலைவர் கலைஞர்,

சிலர் கவிஞர்,
சிலர் நாவலாசிரியர்,
சிலர் நாடக ஆசிரியர்,
சிலர் எழுத்தாளர்,
சிலர் கட்டுரையாளர்,
சிலர் உரைநடை ஆசிரியர்,
சிலர் திறனாய்வாளர்,
சிலர் ஆராய்ச்சியாளர்,
சிலர் பத்திரிக்கையாளர்,
சிலர் சிற்றிலக்கியவாதி,
சிலர் புலவர்,
சிலர் வசனகர்த்தா,
சிலர் பாடலாசிரியர்,
சிலர் ஓவியர்,
சிலர் காப்பிய ஆசிரியர்,
சிலர் புராண ஆசிரியர்,
சிலர் சிறுகதை ஆசிரியர்,
சிலர் பேச்சாளர்,
சிலர்கதை ஆசிரியர்,
சிலர் சொல்லாட்சியர்,
சிலர் செயலாட்சியர்,
சிலர் அரசியல்வாதி,
சிலர் நிர்வாகி,
சிலர் மேலவை உறுப்பினர்,
சிலர் சட்டமன்ற உறுப்பினர்,
சிலர் அமைச்சர்,
சிலர் முதலமைச்சர்,
சிலர்கட்சி பொருளாளர்,
சிலர் கட்சித் தலைவர்,
என தனித்தனியாக
பதவி வகித்தவர்கள்,
பணியும் வகுத்தவர்கள்,
எல்லாமுமாக
வாழ்ந்த தலைவர்,
வாழும் தலைவர்,
வரலாற்று
முதல்வர்
அய்யா கலைஞர்,
சூன் 3
பிறந்தநாள்,
சமூக நீதியாய்
உயர்ந்த நாள்.



**த.சௌந்தரராஜன்**
இணை இயக்குனர் (ஓய்வு)
நகராட்சி நிர்வாகத்துறை.





முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்ட கழக அலுவலகத்திலுள்ள கலைஞரின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் மேயர் ந.தினேஷ்குமார் தலைமையில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை பொது மக்களுக்கு காலை அறுசுவை உணவினை வழங்கினர். இதில் மாவட்ட, மாநகர, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் அயோத்தியாபட்டணம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்த நாளை முன்னிட்டு தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ. விஜயகுமார் ஏற்பாட்டில் முதியோர் இல்லத்தில் காலை உணவு வழங்கல், கழக மூத்த முன்னோடிகள் 15 பேருக்கு பொற்கிழி வழங்கல், ஏழை எளிய மக்களுக்கு அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகளை மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., தலைமை தாங்கி வழங்கினார்.

## கலைஞர் 95

# வாழிய வாழிய வாழியவே!

### 2018–கோபாலபுரம் இல்லத்தில் உணர்வின் மடலை வாசித்துக் காண்பித்து நெகிழ்ந்த தருணம்!



குழந்தையாய்ப் பிறந்து
சிறுவனாய் வளர்ந்து
விபரம் தெரியும் வயதிலேயே
உனக்குத் தமிழும் அறிந்து
தமிழனைக் காக்கும் பணியும் புரிந்து
14 வயதில் பொது வாழ்வின்
பயணத்தைத் தொடங்கிவிட்டாய்
எடுத்த எடுப்பிலேயே இனம்மொழி
காக்கும் அரும் பயணத்தை தொடங்கிவிட முடியுமா?
அதற்காக உன்னை எந்த வயதில் தயார்படுத்தினாய்?
ஐந்து வயதிலும் பத்து வயதிலும்
சிந்திக்க இயலாதே! ஆனால் நீ சிந்தித்தாய்!
அதனால்தான் சொல்கிறோம் **நீ சுயம்பு!**

தாயின் கருவிலே தமிழை
கண்காணித்த காவலன் நீ
இனத்தை உயர்த்த உள்ளிருந்தே
சிந்தித்த பாவலன் நீ
மெய்ஞானமும் விஞ்ஞானமும்
வியந்து பார்க்கிறது உன் அறிவையும் ஆற்றலையும்.
இன்று உனக்கு அகவை 95
நீ பிறந்தநாள் தமிழனின் விழிதிறந்தநாள்
இந்நாள்வரை நீ ஆற்றியுள்ள தமிழ்ப்பணிக்கு
தியாகத்திருப்பணிக்கு ஈடாய் தந்திட
எங்களிடம் எதுவுமில்லை.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா
கண்டெடுத்த நன் முத்து நீ!
அதிலும் கூட ஒரு திருத்தம்
கலைஞர் என்கிற விதையே
நடந்து சென்று விழுந்த மண் ஈரோடு
கலைஞர் என்கிற கருவே
அண்ணா எனும் அழகிய தமிழ் மகனின்
காஞ்சிக் கருவறையில் வளர்ந்தது! மலர்ந்தது!
அஞ்சுகம் ஒரு தாய்
அண்ணா ஒரு தாய்
இரட்டைத் தாய்க்கு ஒரு மகனாய்
பிறந்து வளர்ந்த அதிசயப்பிள்ளை
அதனால்தான் சொல்கிறோம்
**நீ சுயம்பு**

எல்லாத் தலைவர்களும்
மக்களின் நலனுக்காக
தலையில் சுமையைச் சுமந்தார்கள்
நீ மட்டும்தான் தமிழினத்தைக்காக்க
உன் தலையையே சுமையாக
ஆக்கிக்கொண்டாய்
உன் உயிர் உள்ளவரை அந்தச் சுமையை
நீ இறக்கி வைக்கமாட்டாய்.

உன் சுமையை நாங்கள்
வாங்கிக் கொள்ளவும்
தாங்கிக் கொள்ளவும்
இயலாது, முடியாது, நடக்காது.
அதனால்தான் சொல்கிறோம்.
**நீ சுயம்பு**

இன்று நீ ஓய்வை உடலுக்குக் கொடுத்தாலும்
உன் உள்ளம் தமிழனான என்னையும்
இந்த மண்ணையுமே எண்ணிக் கொண்டிருப்பதை
நாங்கள் நன்கறிவோம்.
95 வயதிலும் உன் தலைமையில்தான்
இந்த இயக்கமும் உடன் பிறப்புகளின்
இதயமும் இயங்கிக் கொண்டிருக்கிறது.


திராவிட முன்னேற்றக் கழகத்தின்
நெடும்பயண வரலாற்றில்
உலக அரசியல் வரலாற்றில்
காணாத அற்புதக்காட்சியை
தளபதியின் பொது வாழ்வுப்பயணத்தில்
காண்கிறோம்.

95 வயதிலும் நீயே எங்கள் தலைவர்
என்று தன் தோள்களில் அமரவைத்து
இன்றும் உன் தலைமையில்தான்
தி.மு.க. பீடுநடை போடுகிறதென்பதை
உன்னால் “உழைப்பு உழைப்பு உழைப்பு”
எனப் போற்றப்பட்ட தளபதி அவர்களின்
பயணம் எங்களுக்குப் பாடம் நடத்துகிறது.
தளபதி தோள்களில் நீ!
இன்றும் உன் தலையே
உயர்ந்து நிற்கிறது.
உன் தலைமையில் செயல்தலைவர் தளபதியின்
கால்கள் நிதானமாக அடி எடுத்து வைக்க எங்கள் பயணம் தொடர்கிறது.
தலைவா! உன் மகிழ்ச்சி! உன் எழுச்சி!
உன் கண்ணீர்! உன் நம்பிக்கை!
உன் உழைப்பு! உன் தியாகம்!
வெல்லும்! வெல்லும்!
தளபதி வழியில் வெல்வோம்! வெல்வோம்
அதனால்தான் சொல்கிறோம்.
**நீ சுயம்பு**

**வாகை சந்திரசேகர்**
**தலைவர்,**
**தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை**



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை தெற்கு மாநகர திமுக சார்பில் மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சியை மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையேற்று தொடங்கி வைத்தார். நிகழ்வில்.முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, த.சந்திரசேகரன், அரு.வீரமணி, செ.அசோக் பாண்டியன், துணை மேயர் எம்.லியாகத் அலி, எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, சு.சண்முகம், என்.சாத்தையா, செல்லத்துரை, சி.ஆர்.வி.சித்ரா, ஆர்.ஆர்.சாமிநாதன், செந்தாமரை பாலு, கவிவேந்தன், சி.அரங்கநாயகம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, வட்ட கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் புதுக்கோட்டை வடக்கு மாநகர பொறுப்பாளர் எம்.லியாகத் அலி உழவர்சந்தையில் இனிப்பு வழங்கி சிறப்பித்தார். நிகழ்வில் தலைமை என்.சாத்தையா, காதர் கனி, அ.ரத்தினம், மா.மணிவேலன், ரபீக் புல்லட்.செல்லப்பன், பாண்டியன், சினேகா குமார், முத்து மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.